**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 78/2015**

**வழக்கு சாட்சி: PW.17**

**தேதி: 03.10.2024**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | **குஞ்சரம்** | **ஜாதி:** |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் வேலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்று கேட்டால் எனக்கு கண் தெரியவில்லை. ராஜேஸ்வரி எனது மருமகள். ஆறுமுகம் என் சித்தப்பா மகள். தனபாக்கியம் என் மருமகள். அவர்கள் எப்படி இறந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அவர்கள் வேற ஊரில் வசித்தார்கள். நான் வேற ஊரில் வசித்தேன்.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதிட அரசு தரப்பில் கோரிக்கை விடப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:)**

ராஜேஸ்வரியின் கணவர் பாண்டித்துரை என்பவர் வேலைக்கு செல்லாமல் குடித்துவிட்டு அடிக்கடி தகராறு செய்ததாகவும் அது சம்பந்தமாக ராஜேஸ்வரி மானாமதுரை மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்ததாகவும் 06.01.2015ம் தேதி இரவு 08.00 மணிக்கு எனது உறவினர் வீராச்சாமி என்பவருடன் ராஜேஸ்வரியின் குழந்தையை பார்க்க வேலூர் ஒத்தவீட்டிற்கு வந்த போது உடையனசாமி வீட்டின் அருகே அவரது மனைவி முத்துராக்கு, மாயழகு ஆகியோர் நின்று கொண்டிருந்ததாகவும் ராஜேஸ்வரியின் குழந்தையை பார்க்க தாங்களும் வருவதாக சொன்னதாகவும் நான்கு பேரும் எனது தங்கச்சி மகன் இருளப்பன் வீட்டிற்கு போனதாகவும் வீட்டின் முன் வாசலில் ராஜேஸ்வரி குழந்தையுடன் நின்று கொண்டிருந்ததாகவும் அப்போது எதிரி பாண்டித்துரை TN63K 9093 என்ற மோட்டார் சைக்கிளில் வந்து ராஜேஸ்வரியிடம் குழந்தையை கேட்டு தகராறு செய்துள்ளார். ராஜேஸ்வரி குழந்தையை தர மறுத்ததாகவும் பாண்டித்துரை அவரது முதுகில் வைத்திருந்த அருவாளை எடுத்து ஏண்டி தேவடியா முண்ட குழந்தையை கொடுக்க மாட்டியா என்று சொல்லி இதநோட செத்து தொலை என்று சொல்லி ராஜேஸ்வரியின் வலது அக்கில், இடது கழுத்திற்கு கீழும், மேலும் வெட்டி இரத்தக் காயம் ஏற்படுத்தியதாக அப்போது தனபாக்கியம் அதை தடுக்க வந்ததாகவும் எதிரி பாண்டித்துரை ஏன்டி தேவடியா முண்ட என்னையா தடுக்குற என்று சொல்லி நீயும் செத்து தொலை என்று சொல்லி தனபாக்கியத்தின் இடது சுன்டு விரல், இடது மணிக்கட்டிற்கு மேல் வெட்டியதாகவும் அதில்

தனபாக்கியத்தின் இடது கை துண்டாகி தனியாக விழுந்தது என்றும் பின்னர் எதிரி பாண்டித்துரை தனபாக்கியத்தின் வலது புஜம், வலது தோல் பட்டையின் கீழ் பகுதியிலும், வலது கனுக்கால், இடது கண், இடது தோல் பட்டை, இடது காதிற்கு கீழ் பகுதியிலும், கழுத்திற்கு மேல் பகுதியிலும், இடது முழங்கை, வலது கை புஜம், இடுப்பு நடுக் கழுத்து ஆகிய இடங்களிலும் மாறி, மாறி வெட்டி ரத்தக் காயத்தை ஏற்படுத்தியதாகவும் மேற்படி சம்பவத்தை பார்த்து பயந்து எனது தங்கச்சி ஆறுமுகம் வீட்டிற்கு இருந்து வெளியே ஓடி வரும் போது நீ எங்கடி வெளியே போற தேவடியா முண்ட என்று சொல்லி இடது பக்க காதுக்கு கீழ் பகுதியில், கழுத்து மற்றும் இடது பக்க முதுகிலும் அருவாளால் ஓங்கி வெட்டியதாகவும் அதனால் அந்த மூன்று பேரும் அந்த இடத்திலேயே துடிதுடித்து செத்து போனதாகவும் எதிரி பாண்டித்துரையை பிடிக்க முயன்ற போது என்னை யாராவது தொட்டால் உங்களுக்கும் இந்த கெதி தான் என மிரட்டி விட்டு எதிரி பாண்டித்துரை குழந்தையுடன் கிழக்கு பக்கமாக ஓடியதாகவும் காவல் துறை விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. எதிரி எனது உறவினர் என்பதால் அவரை இந்த குற்றவழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.